


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 11.12.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்













## தமிழக நிகழ்வுகள்

- திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாறு அருகே உள்ள நெற்குணம் கிராமத்தில் **முதலாம் பராந்தகச் சோழன் கால கல்வெட்டு** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - அக்கல்வெட்டு, நெற்குன்ற ஏரிக்கு சோழ சிற்றரசர் வரிச் சலுகை அளித்த செய்தியைக் கூறுகிறது.

## இந்திய நிகழ்வுகள்

- யூனியன் பிரதேசங்களின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் **இந்தியாவின் முதல் நீருக்கடியில் அமையும் அருங்காட்சியகம் புதுச்சேரி கடற்கரையிலிருந்து அமைய உள்ளது**.
  - இவ்வருங்காட்சியகம் அமைப்பதற்காக **INS – கடலூர் (INS-Cuddalore)** மூலம் சுமார் 30,000 கடல் மைல் தொலைவில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

- நீர் முகாமைத்துவத்திற்கான நிலையான கொள்கைகளை மேம்படுத்துவதற்காக, சர்வதேச அளவிலான முதல் **"நிலையான நீர் மேலாண்மை" மாநாடு பஞ்சாப்** மாநிலத்தின் மொஹாலியில் நடைபெற்றது.
  - இம்மாநாட்டில் இமாச்சல் பிரதேசத்தின் ஆளுநர் ஆச்சாரியா தேவ்ரத் என்பவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

- இந்திய விமானப்படை **(IAF – Indian Air Force) மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு விமானப்படை ஆகியவற்றிற்கிடையேயான "AVIAINDRA – 2018"** என்ற கூட்டு விமானப்படை பயிற்சி இராஜஸ்தான் மாநிலத்தின் ஜோத்பூர் நகரில் நடைபெற்று வருகிறது.

- **கேரள** மாநிலத்தின் கண்ணணூரில் புதியதாக அமைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டதன் மூலம் **4 விமான நிலையங்கள் கொண்ட ஒரே மாநிலம்** என்ற பெருமையை கேரளா பெற்றுள்ளது.

We Shine Academy™

## உலக நிகழ்வுகள்

- வங்கிக்கடன் திவால் நெறிமுறைகள் தொடர்பான மாநாடு **(Insolvency and Bankruptcy code of India – New paradigm for stressed Assets)** அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்றது.
    - இம்மாநாட்டில் இந்தியா சார்பாக இந்திய வங்கி திவால் வாரியத்தின் தலைவர் **எம்.எஸ். சாஹூ** கலந்து கொண்டார்.

- சீனாவின் **"பட்டை மற்றும் பாதை முன்னெடுப்பில்" (Belt and Road Initiative – BRI)** இணைந்துள்ள முதல் மத்திய அமெரிக்க நாடு எனும் பெயரை "பனாமா" நாடு பெற்றுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- நிலவில் பயிரிடும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான, சீனாவின் **"சாங் இ -4" (chang'e -4)** என்னும் திட்டத்தின் மூலம் சீனாவானது ரோவர் என்னும் விண்கலத்தை **"லாக் மார்க் - 3B"** என்னும் இராக்கெட் மூலம் வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கியுள்ளது.
    - இந்த ரோவர் விண்கலத்திற்கு **"லூனார் மினி பயோஸ்பியர்"** எனப் பெயரிடப்பட்டுள்ளது.

We Shine Academy™

## பொருளாதார நிகழ்வுகள்

- சீனாவின் பய்ஜிங்-ஐ தலைமையகமாகக் கொண்ட ஆசியன் உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது, **ஆந்திர பிரதேசத்தின் நீர் மேலாண்மை மற்றும் நீர் சுத்திகரிப்பிற்காக சுமார் 400 மில்லியன் டாலர் கடனுதவியை** வழங்க உள்ளது.
    - இவ்வங்கியில் அதிக பங்குகளை கொண்ட நாடுகளில் **இந்தியா இரண்டாவது** இடத்தில் உள்ளது.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம் - டிசம்பர் 09.**
  ஊழலை தடுக்கவும், ஊழல் ஒரு கடுமையான குற்றம் என்பது

குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஆண்டு தோறும் டிசம்பர் 09 ஆம் தேதி சர்வதேச ஊழல் ஒழிப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

- இத்தினமானது 2003 முதல் கடைபிடிக்கப்படுகிறது.

We Shine Academy™